## (1) உடல்தானம் வழங்க முன்வருபவரிடமிருந்து பெறப்படும் விருப்பக் கடிதம்.

அனுப்புநர்

பெறுநர்
முதல்வர்

................................ மருத்துவக் கல்லூரி

ஐயா / அம்மையீர்,

பொருள் : இறந்தபின் உடல்தானம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்தல்.

.......................................................... பகுதியில் வசித்து வருகிற ................. வயதுடைய நான் என்னுடைய இறப்பிற்குப் பின்னர் என்னுடைய உடலை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கல்வி நோக்கத்திற்காக ................................ மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு நானே முன் வந்து தானமளிக்க விரும்புகிறேன்.

இந்த உடல் தானமானது என்னுடைய சொந்த விருப்பத்தின் பேரினால் மட்டுமேயன்றி, இதில் யாதொரு கட்டாயமும் இல்லை என்று நான் இதனால் உறுதியளிக்கிறேன். நான் தெளிந்த மனதுடனும் செயல்பாட்டுடனும் இருக்கிறேன் என்றும் நான் உறுதியளிக்கிறேன்.

எனக்கு ஹெப்படைடிஸ் / எச்.ஐ.வி. அல்லது யாதொரு எனைய தொற்று நோய் எதுமில்லை என்று நான் உறுதியளிக்கிறேன்.

நான் எனது கண்களை தானமளித்துள்ளேன் / தானமளிக்கவில்லை (மரணத்திற்குப் பின்)

மேற்கொண்டும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய விவரங்களை அறியவும் அதன்படி உண்மையாக நடக்கவும் நான் விரும்புகிறேன்.

தேவையான நடைமுறைகளை நான் நிறைவு செய்வதற்கு ஏதுவாக தேவையான படிவங்களை வழங்குமாறு நான் தங்களிடம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றியுடன்,

தங்கள் உண்மையுள்ள

( )

பெயர்
முழு முகவரி
வீடு / செல்போன் / ஏனைய யாதொரு
தகவல் தொடர்புக்காக தொலைபேசி எண்கள்.

/உண்மை நகல்/

## (2) உடல்தானம் அளிக்க விரும்புபவருக்கு, அரசு மருத்துவக் கல்லூரியின் உடற் கூறு இயல் துறையிடமிருந்து வரப்பெறும் கடிதம்.

அனுப்புநர்

பேராசிரியர்
உடற்கூறு இயல்துறை
................................ மருத்துவக் கல்லூரி

பெறுநர்

ஐயா / அம்மையீர்,

பொருள் : மரணத்திற்குப் பின்னர் ................................................................ மருத்துவக் கல்லூரிக்கு உங்களுடைய உடலை தானமாக அளித்தல்

பார்வை : மருத்துவக் கல்லூரியின் முதல்வருக்கு அனுப்பப்பட்ட ................ ஆம் நாளிட்ட உங்களுடைய கடிதம்.

மாணவர்களின் கல்வி நோக்கங்களுக்காக, எங்களுடைய நிறுவனத்திற்கு உங்களுடைய உடலை தானமாக அளிக்கின்ற உங்களுடைய மனித நேயமிக்க செயலை நாங்கள் பாராட்டுகிறோம். இதற்காக உங்களுடைய பெயரை எங்களுடைய நிறுவனத்தில் பதிவு செய்துள்ளோம்.

உடல் தானம் அளிக்க முன்வருப்வர் தொடர்ந்து செயல்படுவதற்கு ஏதுவாக பின்வரும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டியுள்ளது. தேவைப்படும் படிவங்களை நிரப்பி அவற்றை தேவையான ஆவணங்களுடன் அனுப்ப வேண்டும். அப்பொழுது தான் உங்களுடைய பெயர், விருப்ப உடல்தானத்திற்காக பதிவு செய்யப்படும். பதிவு செய்வதற்கான நடைமுறைகளை முடித்தப் பின்னரே பதிவு எண் கொண்ட அடையாள அட்டை ஒன்று உங்களுக்கு வழங்கப்படும். இந்த அடையாள அட்டை, உங்களை இரக்கமுள்ள உடல்தானம் வழங்குபவராக அடையாளப்படுத்துவதுடன், உடல்தானம் வழங்குவதற்கான நடைமுறையையும் எளிதாக்கும்.

/உண்மை நகல்/

## (3) உடல்தானம் அளிக்க முன்வருபவர் அதனை பதிவு செய்வதற்கு அளிக்கப்பட வேண்டிய படிவங்களும் ஆவணங்களும்

1. (அ) உடல்தானம் வழங்குபவரின் சொந்த விருப்பத்தின் பேரில் யாதொரு கட்டாயமுமின்றி மரணத்திற்குப் பின்னர் அவருடைய உடலை தானமாக அளிக்கிறார் என்றும்

   (ஆ) உடல்தானம் அளிப்பதை பதிவு செய்யும் சமயத்திலும் அதன் பின்னரும் உடல்தானம் அளிப்பதில் சட்டப்படிக்கரன வாரிசுதாரர்கள் மறுப்புகள் தெரிவிக்கமாட்டார்கள் என்றும்.

   (இ) உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படிக்கான வாரிசுகள் அல்லது நெருங்கிய உறவினர்கள் மறுப்புகள் எவற்றையும் தெரிவிக்க மாட்டார்கள் என்றும் ஆகவே மரணத்திற்கு பின்னர் உடலுக்கு உரிமை கோர மாட்டார்கள் என்று உடல்தானம் அளிக்க முன் வருபவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று.

2. மேற்சொன்ன கடிதமானது இரண்டு சாட்சிகளால் மேலொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

3. உடல்தானம் வழங்குபவரின் உடலை தானமாக அளிப்பதற்கு சட்டப்படிக்கான வாரிசுகளுக்கு எந்தவொரு மறுப்பும் இல்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்ற வகையில் உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படிக்கான வாரிசுகளிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ஒன்று

4. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படிக்கான வாரிசுகள் அனைவரையும் குறிப்பிடும் வகையில் சம்பந்தப்பட்ட வருவாய் அதிகாரியிடமிருந்து (வட்டாட்சியரின் பதவித் தரத்திற்கு குறையாத) பெறப்பட்ட சட்டப்படிக்கான வாரிசு சான்றிதழின் நகல் ஒன்று.

5. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவரின் இரண்டு அடையாளக் குறியீடுகளைத் தெளிவாகக் குறிப்பிடுகின்ற அடையாளச் சான்றிதழ் ஒன்று.

6. உடல்தானம் வழங்குபவரின் மூன்று பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்.

/ உண்மை நகல் /

## (4) உடல்தானம் வழங்குபவர் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கான வழிகாட்டிக் குறிப்புகள் மற்றும் அறிவுரைகள்

1. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவர் மரணமடைந்துவிட்ட பின்னர் அவருடைய உடலை, காலம் கடத்தாமல் (8 முதல் 24 மணி நேரத்திற்குள்) அவர் உடல் தானம் வழங்குவதற்காக பதிவு செய்துள்ள அரசு மருத்தவக் கல்லூரிக்கு அல்லது தமிழ்நாடு மாநிலத்தில் அருகிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2. உடலை பயிற்றுவிக்கும் மருத்துவ நிறுவனத்திற்கு கொண்டு செல்வதற்கு நிறுவனம் ஏற்பாடு செய்யும் வகையில், உடல்தானம் வழங்குபவர், மரணமடைந்துவிட்ட தகவலை அருகிலுள்ள பயிற்றுவிக்கும் மருத்துவ நிறுவனத்தினர் முதல்வர் / இருப்பிட மருத்துவ அதிகாரிக்கு தெரிவிக்குமாறு சட்டப்படிக்கான வாரிசுகள் அல்லது நெருங்கிய உறவினர்களிடம் கேட்டுக் கொள்ளப்படலாம்.

3. இறப்பு ஏற்பட்டதற்கான காரணம் மற்றும் இறப்பு ஏற்பட்ட நேரத்தைத் தெளிவாக குறிப்பிடுகின்ற வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியால் அளிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ் மேற்சொன்ன உடலுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

4. உடற்கூறு இயல்துறையால் அனைத்து வேலை நாட்களிலும் காலை 8.00 மணி முதல் மாலை 3.30 மணி வரையில் உடல் பெற்றுக் கொள்ளப்படும். பணி நேரம் அல்லா பிற நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் இருப்பிட மருத்துவ அதிகாரியிடம் தேவையான வகையில் கேட்டு கொள்வதன் பேரில் மருத்துவமனையின் பிணவறையில் உடல் வைக்கப்படும்.

5. மரணம் இயற்கையான முறையில் / அல்லது இயற்கையில் ஏற்படுகிற நோயால் ஏற்பட்டிருக்க வேண்டும்.

6. மருத்துவம் சார் சட்ட பிரச்சினைகள் தற்கொலை நஞ்சு அருந்தியதால் ஏற்பட்ட மரணம் ஆகிய நேர்வுகளில் உடல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

/ உண்மை நகல் /

அலுவலக கண்காணிப்பாளர்